




## தேர்தலுக்கு முன்பே மண்ணைக் கவ்விய NDA கூட்டணி!

# ஆணவ பா.ஜ.க.வின் வீழ்ச்சி தமிழ்நாட்டில் தொடக்கம்!

### திண்டுக்கல் – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில்
### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

திண்டுக்கல், ஏப்.19

**தேர்தலுக்கு முன்பே மண்ணைக் கவ்விய NDA கூட்டணி; ஆணவ பா.ஜ.க.வின் வீழ்ச்சியை, தமிழ்நாடு தொடங்கி வைத்திருக்கிறது! பத்துத்தோல்வி பழனிசாமிக்குப் பத்துக் கேள்விகள்; ஏப்ரல் 23 அன்று மக்கள் உங்களுக்கு பூஜ்ஜியம் மதிப்பெண்தான் போடுவார்கள்! என்றும் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.04.2026) திண்டுக்கல்லில் நடைபெற்ற சட்டமன்றத்தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.**

**அவரது உரை வருமாறு:**

வெற்றிச் செய்தியோடு வெடியை போட்டுவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன்.

தேர்தலுக்கு முன்பே, N.D.A. கூட்டணி மண்ணை கவ்வியிருக்கிறது.

இது சாதாரண வெற்றியல்ல; இன்னும் 100 ஆண்டுகள் கழித்தும், வரலாற்றில் நின்று பேசப் போகும் வெற்றி!

ஆணவ பா.ஜ.க.வின் வீழ்ச்சியை, தமிழ்நாடு தொடங்கி வைத்திருக்கிறது.

தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும் என்று சொன்னேன். இன்று, தமிழ்நாடு வென்றிருக்கிறது.

அனைவரும் சொல்லுங்கள். வெல்க... வெல்க... வெல்கவே... தமிழ்நாடு வெல்கவே! வெல்க... வெல்க... வெல்கவே... அரசியல் சட்டம் வெல்கவே! நன்றி.

எதிர்க்கட்சிகள் என்னவெல்லாம் சொன்னார்கள்... கருப்புக் கொடி ஏற்றினால் - கருப்புச் சட்டடை போட்டால் முடியுமா என்று கேட்டார்கள். இப்போது ஒரே போடாக போட்டுவிட்டோமா இல்லையா...

ஆனால், இதெல்லாம் அவர்களுக்கு போதாது. ஏப்ரல் 23 - தேர்தலில் நீங்கள் அடிக்கப் போகும் அடியிருக்கிறதே, அதுதான் ரியல் அடி! இந்தியா முழுவதும் இருக்கும் காவிக்கறை துடைத்தெறியப்படும் தொடக்க அடி! அதுவும், தமிழ்நாட்டில் இருந்துதான் தொடங்கப் போகிறது. இனிமேலாவது, தேவையில்லாமல் தமிழ்நாட்டை உரசிப் பார்க்காதீர்கள். தாங்க மாட்டீர்கள்.

**தமிழ்நாட்டை உரசினால்
தாங்க மாட்டீர்கள்!**

பிரதமர் மோடி அவர்கள், தன்னுடைய 12 ஆண்டு கால ஆட்சியில் சந்தித்திருக்கும் முதல் தோல்வி - மாபெரும் தோல்வி இது! தேர்தலுக்கு முன்பே, தமிழினத் துரோகி எடப்பாடி சந்தித்திருக்கும் படுதோல்வி இது!

தேர்தல் நேரத்தில் இதுபோன்ற சட்டம் கொண்டு வந்தால், தமிழ்நாட்டில் அனைவரும் அசால்ட்டாக இருந்து விடுவோம் என்று நினைத்தார்கள். தமிழ்நாடு எப்போதுமே அலர்ட்டாகதான் இருக்கும்! ஏன் என்றால், இங்கிருப்பது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

தமிழ்நாடு முதலமைச்சராக இந்த ஸ்டாலின் பற்ற வைத்த தீ, டெல்லியின் ஆணவத்தை சுட்டெரித்திருக்கிறது! நம்முடைய போராட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. கருஞ்சட்டைப் படை காவிப்படையை வீழ்த்தியிருக்கிறது!

மகளிர் இடஒதுக்கீடு என்று முகமூடி போட்டு, தொகுதி மறுவரையறைக்காக பா.ஜ.க. கொண்டு வந்த மசோதாவை இந்தியா கூட்டணியைச் சேர்ந்த எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இன்று தோல்வியடைய வைத்திருக்கிறார்கள்.



கருப்பு சட்டத்திற்கு எதிராக வாக்களித்த அனைத்து எம்.பி.-க்களுக்கும் - அந்தக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களின் சார்பில் - இங்கிருக்கும் உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய கோடான கோடி நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மகளிருக்கான இடஒதுக்கீட்டை முதன்முதலாக உள்ளாட்சியில் கொடுத்தது, தி.மு.க.! இந்த ஸ்டாலின் ஆட்சியில், தமிழ்நாடு உள்ளாட்சியில் 50 சதவீத மகளிர், பொறுப்புகளில் இருக்கிறார்கள்.

> **அனைத்து எம்.பி.–க்களுக்கும் –**
> **அந்தக் கட்சிகளின் தலைவர்களுக்கும்,**
> ## கோடான கோடி நன்றி!
> **கருப்பு சட்டத்திற்கு எதிராக வாக்களித்த அனைத்து எம்.பி.–க்களுக்கும் – அந்தக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களின் சார்பில் – இங்கிருக்கும் உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய கோடான கோடி நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

**திண்டுக்கல் வந்த நேரத்தில் சிறந்த
தீர்ப்பு கிடைத்துள்ளது!**

1973-இல் நான் 'திண்டுக்கல் தீர்ப்பு' என்ற நாடகத்தில் நடித்தேன். இன்றைக்குத் திண்டுக்கல் வந்த நேரத்தில் தமிழ்நாட்டிற்கு சிறந்த தீர்ப்பு கிடைத்திருக்கிறது!

40 பேர் டெல்லிக்குச் சென்று, என்ன செய்கிறார்கள்? என்று எடுபிடி எடப்பாடி கேட்டார். இப்போது பார்த்தீர்களா... நம்முடைய தமிழ்நாட்டு எம்.பி.-க்கள் பா.ஜ.க.காரர்களை பார்லிமென்ட்-இல் பந்தாடிவிட்டு வந்திருக்கிறார்கள். இதுவே அ.தி.மு.க. அடிமைகள் அங்கே சென்றிருந்தால், என்ன செய்திருப்பார்கள் என்று உங்களுக்கே நன்றாகத் தெரியும்.

கருப்பு சிவப்புப் படை, கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரை விடாமுயற்சியாக தமிழ்நாட்டிற்காகப் போராடும்!

இப்போது சொல்லுங்கள்? இந்த மண்ணில் யார் ஆட்சி தொடர வேண்டும்? 200 தொகுதிகளுக்கு மேல் எந்த அணி வெல்ல வேண்டும்? தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா?

திண்டுக்கல் வீரத்தின் விளைநிலம். திண்டுக்கல் என்பது ஒரு ஊரின் பெயர் மட்டுமல்ல, அது புரட்சியின் பெயர்! எழுச்சியின் பெயர்! பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராகப் போராடித் தன் கணவனை இழந்த பிறகும், பச்சைக் குழந்தையைக் கையில் வைத்திருந்த நிலையில் போராடிய வேலு நாச்சியாரும் - மானம் காத்த மருது சகோதரர்களும் - தன் அண்ணன் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட பிறகும் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்த தம்பி ஊமைத்துரையும் - அடுத்தகட்ட போராட்டத்தை நடத்தத் திட்டமிட்ட ஊர், இந்தத் திண்டுக்கல்.

ஆன்மீகமா? கோட்டை மாரியம்மனும், பழனியாண்டவரும்! சுற்றுலாவா? குளுகுளு கொடைக்கானல், சிலுசிலு சிறுமலை! சாப்பாடா? தனித்துவமான பிரியாணி! எல்லாவற்றிற்கும் மேலாக, காவலுக்குப் புகழ்பெற்ற திண்டுக்கல் பூட்டு!

இன்றைக்குத் தமிழ்நாட்டின் உரிமைகளையும் திருடிக்கொண்டு போகலாம் என்று நினைத்தார்கள். உள்ளூர் அடிமைகளை அழைத்து துணைக்கு வைத்துக் கொண்டு, டெல்லி கும்பல் வருகிறார்கள். திடமான பூட்டுக்குப் பெயர் பெற்ற திண்டுக்கல் மக்கள் அவர்களுடைய சதியை முறியடிக்க வேண்டும். அதற்காகத்தான் உங்கள் ஆதரவைத் தேடி, நான் வந்திருக்கிறேன்.

1973-ஆம் ஆண்டு 'திண்டுக்கல் தீர்ப்பு' என்ற நாடகத்தில் நான் நடித்தேன். 2026 தேர்தலில் திண்டுக்கல் தீர்ப்பு முழுக்க முழுக்க தி.மு.க. பக்கம்தான் இருக்க வேண்டும் என்று கேட்க வந்திருக்கிறேன். உயிரே போனாலும் தமிழ்நாட்டு உரிமைகளுக்காக வாதாட நான் தயார்? நியாயத்தின் பக்கம் நின்று, நம்முடைய கூட்டணிக்கு ஆதரவாகத் தீர்ப்பெழுத திண்டுக்கல் தயாரா? திராவிட மாடல் 2.0 உறுதியா? நன்றி!

**வெற்றி வேட்பாளர்கள் அறிமுகம்!**

இப்போது உங்கள் அனுமதியோடு நமது வெற்றி வேட்பாளர்களை அறிமுகப்படுத்தப் போகிறேன்.

முதலில், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அனைவராலும் அன்போடு I.P. என்று அழைக்கப்படும் அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள். திண்டுக்கல் மாவட்டத்தையே தி.மு.க.வில் நாங்கள் ஐ.பி. மாவட்டம் என்றுதான் சொல்லுவோம். எதிரிகளுக்கு 'ஐ.பி.' பெயரைக் கேட்டாலே, பி.பி. எகிறும். அந்தளவுக்கு ஆளுமைத் திறன் கொண்டவர். கழகத்தையும் சரி, அவரிடம் கொடுத்த துறையையும் சரி, இந்த மாவட்டத்தையும் சரி, பெரிய அளவில் வளர்த்த ஐ. பெரியசாமி அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள். ஐ.பி. அவர்களின் உடன்பிறவா தம்பி சக்கரபாணி அவர்கள். இந்த மண்டலத்தை ஐ.பி.யோடு சேர்ந்து வளர்த்து வருபவர். மாவட்டச் செயலாளர், மண்டலப் பொறுப்பாளர், மாண்புமிகு அமைச்சர் என மூன்றையும் மிகச் சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டுபவர். பெயர்தான் அர. சக்கரபாணி, ஆனால் உழைப்பால் முழுச் சக்கரபாணி! அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ஐ.பி. செந்தில்குமார் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் ஐ.பி. அவர்களின் மகனாக இருந்தாலும், செயல்பாட்டில் தன்னுடைய தனித்தன்மையால், "செந்திலின் அப்பா ஐ.பி." எனச் சொல்லும் அளவுக்குப் பெருமையைப் பெற்றுத் தரும் என்னுடைய அருமை கழகத் தம்பி. இளைஞரணி துணைச் செயலாளராக இருந்த அவர், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளராக இப்போது சிறப்பாகச் செயல்படுகிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் எஸ். நாகஜோதி அவர்கள். கழகக் குடும்பத்தைச் சேர்ந்த நாகஜோதி, விராலிமலையன்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி அவர்களுடைய வளர்ச்சிக்காக பாடுபடுபவர். கழகத் தொண்டையும், மக்கள் சேவையையும் தொடர்ந்து செய்து வரும் அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்க வேண்டும்.

அடுத்து, வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் வீரா. சாமிநாதன் அவர்கள். அடிமட்டத்திலிருந்து வளர்ந்தவர். மக்கள் சேவகர். வேடசந்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, பழனி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த என். பாண்டி அவர்கள். இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் மூலம் அரசியல் பணியைத் தொடங்கியவர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர், கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் போன்ற பொறுப்புகளை வகித்தவர். சி.பி.எம். கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர். மக்களுக்காகப் போராடிச் சிறை சென்றவர். அவருக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, நத்தம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கே. செல்வகுமார் அவர்கள். தமிழர் தேசம் கட்சி, வீரமுத்தரையர் முன்னேற்றச் சங்கத் தலைவர். வழக்கறிஞர். முத்தரையர் சமுதாய மக்களின் நலனுக்காகவும் அவர்களுடைய உரிமைக்காகவும் குரல் கொடுத்து வருபவர். நமது கூட்டணிக்கு வலு சேர்க்க வந்திருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

**திண்டுக்கல் சொன்னால்
தமிழ்நாடே சொன்ன மாதிரி!**

இந்த வேட்பாளர்களின் வெற்றி 100 சதவீதம் உறுதியா? உறுதி (மக்கள்). நன்றி! வேட்பாளர்கள் இப்போது உட்காரலாம். உங்கள் சீட் கன்பார்ம் ஆகிவிட்டது!

திண்டுக்கல் சொன்னால், தமிழ்நாடே சொன்ன மாதிரி! அப்படிப்பட்ட திண்டுக்கல் மாவட்டத்திற்குக் கடந்த 5 ஆண்டுகளில் ஏராளமான திட்டங்கள் செய்து தரப்பட்டிருக்கின்றன. சும்மாவா, 2 அமைச்சர்கள் வேறு வைத்திருக்கிறீர்கள். நேரத்தின் அருமை கருதி, சுருக்கமாகச் சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம். இதன் மூலம் 8 லட்சம் மக்கள் பயனடைகிறார்கள்.

நிலக்கோட்டை, வத்தலகுண்டு, பட்டிவீரன்பட்டி ஆகிய அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டிடங்கள்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு திருக்குடமுழுக்கு விழா.

தொடர்ச்சி 12 –ஆம் பக்கம்